SM – 185

IV Semester B.A./B.Sc./B.Sc.(FAD)/B.C.A. Examination, May/June 2018
(2015-16 and Onwards) (Freshers and Repeaters) (CBCS)
TAMIL LANGUAGE (Part – I) (Paper – IV)

Time : 3 Hours

Max. Marks : 70

I. விரிவான விடை தருக.

1. ஈகையின் சிறப்புகளை திருவள்ளுவர் வழிநின்று விளக்குக.

(அல்லது)

குறிப்பறிதலின் இயல்புகளை விளக்கி வரைக. 10

2. காவிரி நதியின் சிறப்பினையும், சோழநாட்டு மக்களின் செல்வ மனைகளும் குறித்து எழுதுக.

(அல்லது)

பட்டினப்பாலை காட்டும், அங்காடித் தெரு, வணிகர் இயல்பு குறித்து எழுதுக. 10

II. இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

1) பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின், தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும்

(அல்லது)

தன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்குநீர்
இந்நீரர் ஆகுதிர் என்று 4

2) வேறுபட்ட வினை ஓவத்து
வெண்கோயில் மாசு ஊட்டும்

(அல்லது)

அருங்கடி வரைப்பின் ஊர்கலின் அழிய
பெரும்பாழ் செய்தும் அமையான் 4

III. அ) ஒன்று குறித்துத் திறனாய்க. 15

1) இராமலிங்க சுவாமிகளின் இளமைக்காலம், திருமண வாழ்க்கைக் குறித்து எழுதுக.

2) இராமலிங்க சுவாமிகளுக்கும்-காஞ்சி மடாதிபதிக்கும் இடையே நடந்த உரையாடல் குறித்து எழுதுக.

LIBRARY
Surana College
No. 16, South End Road,
BANGALORE - 560 004

P.T.O.

ஆ) இரண்டிற்கு சுருக்கமான விடை தருக. (2×5=10)

1) மூடம் முண்டம் வித்துவான்-விளக்குக.

2) விரையன் பாத்திரப்படைப்பை ஆய்க.

3) பசித்திரு, தனித்திரு, விழித்திரு.

4) இரத்தின முதலியார்-பாத்திரப்படைப்பை ஆய்க.

IV. நீவிர் பணிபுரியும் தொழிற்சாலைக்கு போதிய பணியாட்களை நியமனம் செய்யக்கோரி, உதவி மேலாளர் என்ற நிலையில், அதன் நிருவாக இயக்குநருக்குக் கோப்பு ஒன்று தயார் செய்து அனுப்புக. 8

V. **மூன்றில்** ஒரு பங்காகச் சுருக்கி வரைக. 9

உணவுத் தேவை பற்றிய பாதுகாப்பு, வேலைப்வாய்ப்புப் பெருக்குதல், வறுமையைத் போக்குதல், நாட்டின் ஏற்றுமதி அளவை மிகக் கணிசமான அளவில் வளர்த்தல் என ஒரு நாட்டின் பல வளர்ச்சி நிலைகளுக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் விவசாயம் பெருமளவில் உதவுகிறது. இந்தியா விடுதலை பெற்ற காலகட்டம் வரை விவசாயம் என்பது பருவமழையை மட்டுமே நம்பியிருந்த நிலையுடையதாகும் ஆனால் கடந்த காலகட்டங்களில் பெருமளவு முன்னேற்றம் இத்துறையில் ஏற்பட்டுள்ளது. நீர்ப்பாசனத்துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள பெரிய, சிறிய அளவிலான முன்னேற்றங்களான அணைகள், கால்வாய்கள், உருவாக்கம். மிகுந்த பயனைத் தரக்கூடிய பல்வேறுபட்ட விதைகள் பயன்படுத்துவது ரசாயன உரங்களைப் பயுன்படுத்துவது என விவ சாயத்துறையில் பல நவீன முறைகள் பின்பற்றும் நிலை இன்று உள்ளது. இதன் விளைவாக உற்பத்தி பெருகி இருப்பதாக பொருளியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.